# அப்போஸ்தலருடையே நடபடிகள்

பாடம் 2

அமைப்பும் உள்ளடக்கமும்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய  எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட  நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு  மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை  பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு   பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு  வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல்  பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

சொல்லாட்சி உத்தி ........ 2

**கூறப்பட்ட நோக்கம்** ........ 2

வரலாற்று கணக்கு ........ 3

சுவிசேஷ செய்தி ........ 5

**அதிகாரத்தின் மீது நம்பிக்கை** ........ 6

வார்த்தைகள் ........ 7

கிரியைகள் ........ 10

**கட்டமைப்பு முறை** ........ 11

சுருக்க அறிக்கைகள் ........ 11

சபை வளர்ச்சி ........ 12

உள்ளடக்கம் ........ 14

**எருசலேம்** ........ 15

**யூதேயா மற்றும் சமாரியா** ........ 17

**பூமியின் கடைசி பரியந்தம்** ........ 18

பெனிக்கே, சீப்புரு மற்றும் அந்தியோகியா ........ 18

சீப்புரு, பிரிகியா மற்றும் கலாத்தியா ........ 19

ஆசியா, மக்கெதோனியா மற்றும் அகாயா ........ 20

ரோம் ........ 21

நவீன பிரயோகம் ........ 22

**இலக்கிய தன்மை** ........ 22

தேர்ந்தெடுத்தவை ........ 23

அத்தியாயம் ........ 24

மறைமுக ஆதாரங்கள் ........ 24

**தொடர்ச்சியின்மைகள்** ........ 27

வேறுபட்ட காலம் ........ 28

வெவ்வேறு சூழ்நிலைகள் ........ 29

**தொடர்ச்சிகள்** ........ 30

அதே தேவன் ........ 31

அதே குறிக்கோள் ........ 31

அதே சுவிசேஷம் ........ 32

முடிவுரை ........ 33





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

ஒரு ஆசிரியரான எனக்கு சில சமயங்களில் உலகின் பல நாடுகளில் பயணம் செய்யும் வாய்ப்பு கிடைக்கிறது. ஒவ்வொரு பயணத்திற்கு முன்பும், இரண்டு முக்கியமான விஷயங்களை நான் எப்போதும் புரிந்துகொள்கிறேன். முதலில், நான் எங்கு செல்கிறேன் என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும். இரண்டாவதாக, நான் எப்படி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வருவேன் என்பதை நான் தெரிந்து கொள்ள வேண்டும். நான் ஒரு விமானத்தில் செல்லலாமா? ஒரு பேருந்தில் பயணம் செய்யலாமா? அல்லது வேறு ஏதேனும் போக்குவரத்தைப் பயன்படுத்தவா? என்று திட்டமிட வேண்டும். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை நாம் வாசிக்கும்போது இதே போன்ற உண்மையை நாம் எதிர்கொள்கிறோம். கதை எங்கு செல்கிறது என்பதையும், நம் இலக்கை நோக்கி நம்மை வழிநடத்த லூக்கா என்ன இலக்கிய உத்திகளைப் பயன்படுத்துகிறார் என்பதையும் அறிய இது உதவுகிறது.

இதுவே *அப்போஸ்தலருடைய நடபடிகள்* என்கிற நமது தொடரின் இரண்டாம் பாடமாகும். இந்த தொடரில், ஆரம்பகால சபை இயேசுவின் ஊழியத்தைத் தொடர்ந்ததைப் பற்றிய பதிவை ஆராய்ந்து வருகிறோம். இந்த பாடத்திற்கு ”கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம்” என்று நாம் தலைப்பிட்டுள்ளோம், ஏனென்றால் லூக்கா தனது உள்ளடக்கத்தை ஒழுங்கமைத்த விதம் மற்றும் அவர் கற்பிக்க விரும்பிய செய்தியை இதில் பார்ப்போம்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் பற்றிய நமது ஆய்வு மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், புத்தகத்தின் சொல்லாட்சி உத்தியை ஆராய்வோம், இந்த புத்தகத்தை எழுதுவதற்கான லூக்காவின் அணுகுமுறை அதை எவ்வாறு விளக்குகிறது என்பதைப் பார்ப்போம். இரண்டாவதாக, புத்தகத்தின் உள்ளடக்கத்தை ஆராய்வோம், அதன் உள்ளடக்கத்தின் அமைப்பைக் குறிப்பிட்டு, முதல் நூற்றாண்டில் அது எவ்வாறு புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் என்பதைக் கருத்தில் கொள்வோம். மூன்றாவதாக, லூக்காவின் பழங்காலச் செய்தி நம் நாளில் எவ்வாறு அதிகாரப்பூர்வமாக பேச முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, புத்தகத்தின் நவீன பயன்பாட்டிற்கான ஒரு மாதிரியைப் பரிந்துரைப்போம். அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் சொல்லாட்சி உத்தியை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# சொல்லாட்சி உத்தி

நாம் வேதாகமத்தில் ஒரு புத்தகத்தைப் படிக்கும்போதெல்லாம், ஆசிரியர் தனது பார்வையை வாசகர்களுக்கு அறிவுறுத்துவதைப் பற்றி நன்கு தெரிந்துகொள்வது முக்கியம். இது போன்ற பின்வரும் கேள்விகளை நாம் கேட்க வேண்டும்: ஆசிரியர் ஏன் இந்த புத்தகத்தை எழுதினார்? தனது வாதத்தை நிறுவுவதற்காக அவர் என்ன செய்தார்? மேலும் அவர் தனது வாசகர்களை சரியான முடிவுகளுக்கு நேராக வழிகாட்டும் வகையில் தனது புத்தகத்தை எப்படி வடிவமைத்தார்? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் பல நுண்ணறிவுகளைத் தருகின்றன, அவற்றை நாம் ஒருபோதும் புறக்கணிக்கக்கூடாது.

இந்த புத்தகத்தை அணுகும்போது, லூக்காவின் சொல்லாட்சி உத்தியின் மூன்று அம்சங்களில் கவனம் செலுத்துவோம். முதலில், அவருடைய நோக்கத்தைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, அதிகாரத்தின் மீது அவர் சார்ந்திருப்பதைக் குறிப்பிடுவோம். மூன்றாவதாக, புத்தகம் முழுவதும் அவர் பயன்படுத்திய சில கட்டமைப்பு வடிவங்களைப் பற்றி பேசுவோம். அப்போஸ்தலர் புத்தகத்தை எழுதுவதற்கு லூக்கா கூறிய நோக்கத்தை முதலில் பார்க்கலாம்.

## கூறப்பட்ட நோக்கம்

மக்கள் நீண்ட மற்றும் சிக்கலான புத்தகங்களை எழுதும்போது, அவர்கள் பொதுவாக பல நோக்கங்களை கொண்டிருப்பார்கள். லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் இரண்டு தொகுதி படைப்பை எழுதிய லூக்காவும் அதைத் தான் செய்தார். அவரது எழுத்து தெயோப்பிலு மற்றும் சபையின் வாழ்க்கையை பல்வேறு வழிகளில் பாதிக்கும் என்று அவர் நம்பினார். எனவே, அவருடைய நோக்கங்களை மிகைப்படுத்தாமல் நாம் கவனமாக இருக்க வேண்டும். அப்படியிருந்தும், லூக்கா தனக்கு ஒரு நோக்கம் இருப்பதாக வெளிப்படையாகக் கூறினார்.

லூக்கா தனக்கு இரண்டு நோக்கங்கள் இருப்பதாகத் தெளிவாகக் கூறினார். ஒருபுறம், லூக்கா தனக்கு வரலாற்று நோக்கங்கள் இருப்பதாக அறிவித்தார், முதல் நூற்றாண்டில் சபையின் உண்மையான மற்றும் நம்பகமான வரலாற்றுக் கணக்கை எழுத அவருக்கு விருப்பமாக இருந்தது. மறுபுறம், அவர் குறிப்பிடத்தக்க இறையியல் நோக்கங்களைக் கொண்டிருப்பதாக அறிவித்தார், மேலும் சுவிசேஷத்தின் உண்மை மற்றும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் விரும்பினார். லூக்காவின் இரு மடங்கு நோக்கத்தின் இரு அம்சங்களைப் பார்ப்போம். முதலில் ஒரு உண்மையான வரலாற்றுக் கணக்கை எழுதும் அவருடைய நோக்கத்துடன் தொடங்குவோம்.

## வரலாற்று கணக்கு

அவரது சுவிசேஷத்தின் முன்னுரையில், அதாவது லூக்கா 1:1-3 இல், ஆரம்பகால சபையின் உண்மையான வரலாற்றை எழுதுவதில் தான் மிகுந்த அக்கறை கொண்டிருந்ததாக லூக்கா சுட்டிக்காட்டினார். அவருடைய வார்த்தையை கவனியுங்கள்:

> மகா கனம்பொருந்திய தெயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டார்கள். ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:1-3).

உண்மையான வரலாற்றில் லூக்காவுக்கு இருந்த அக்கறை இந்த பத்தியில் பல வழிகளில் தெரிகிறது. “முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை” என்று அவர் குறிப்பிட்டார். அதாவது நடந்த சரித்திர சம்பவங்களை அவர் குறிப்பிட்டார். அவர் ”கண்கண்ட சாட்சிகளை” கலந்தாலோசித்ததாகவும், அவர் பதிவு செய்த விவரங்களை ”கவனமாக விசாரித்ததாகவும்” குறிப்பிட்டார். அவர் தெரிவித்த உண்மை தெளிவாகவும் துல்லியமாகவும் தெரிவிக்கப்பட வேண்டும் என்பதற்காக அவைகளை வரிசைப்படுத்தினார்.

சுருக்கமாக, லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகளின் ஒரு உண்மையான வரலாற்றுப் பதிவை வழங்க எண்ணினார், சுவிசேஷத்தில் இயேசுவின் வாழ்க்கை தொடங்கி, அப்போஸ்தலர் புத்தகத்தில் முதல் நூற்றாண்டு சபை வரையிலான காரியங்களை பதிவு செய்தார். லூக்கா உண்மையான வரலாற்றை பதிவு செய்வதில் அக்கறை கொண்டிருந்தார், ஏனெனில் அவர் வேதம் முழுவதும் மீண்டும் மீண்டும் வரக்கூடிய ஒரு அடிப்படைக் கொள்கையான தேவன் தன்னை உண்மையான வரலாறு, இடம் மற்றும் நேரத்தில் வெளிப்படுத்துகிறார் என்பதைப் புரிந்துகொண்டார். அவர் தனது இரட்சிப்பு மற்றும் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவர வரலாற்றில் பணியாற்றுகிறார்.

துரதிர்ஷ்டவசமாக, சமீபத்திய நூற்றாண்டுகளில் பல விமர்சன அறிஞர்கள் ”இரட்சிப்பு” மற்றும் ”நியாயத்தீர்ப்பு” ஆகியவற்றின் கருத்துக்கள் உண்மையான வரலாற்றிலிருந்து பரஸ்பரம் தனித்திருக்கின்றன என்று வாதிட்டனர். பொதுவாக, தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்கள் வரலாற்றில், உண்மையான இடம் மற்றும் நேரத்தில் நிகழ்வதில்லை என்று அவர்கள் உறுதியாகக் கூறினர். உண்மையான வரலாறு இயற்கையானது,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயற்கைக்கு அப்பாற்பட்டது அல்ல என்று அவர்கள் நம்புகிறார்கள். இதன் விளைவாக, விமர்சனம் செய்யும் இறையியலாளர்கள் வேதத்தில் தேவனுடைய செயல்களைப் பற்றி படிக்கும்போது, அவர்கள் பெரும்பாலும் இந்த கணக்குகளை உண்மையற்ற மத உணர்வுகளின் வெளிப்பாடுகள் என்று கருதுகின்றனர், இது ஒரு வகையான "பக்தியுள்ள கற்பனைக் கதை" எனப்படும்.

ஆனால் லூக்காவே தான் பக்தி கற்பனைக் கதைகளை எழுத முயற்சிக்கவில்லை என்பதை தெளிவுபடுத்தினார்; அவர் உண்மையான வரலாற்றை எழுதவே எண்ணினார். உண்மையில், அவர் தனது கூற்றுக்களை சரிபார்க்கும் வகையிலும் நிராகரிப்பதை எளிதாக்கும் வகையிலும் எழுதினார். ஒரு உதாரணமாக, லூக்கா தனது கணக்குகளை நன்கு அறியப்பட்ட வரலாற்று சூழல்களுக்குள் அமைத்தார். உதாரணமாக, அப்போஸ்தலர் புத்தகத்தில், 5:34 இல் கமாலியேல், 18:12 இல் கல்லியோன், 23:26 இல் பேலிக்ஸ், மற்றும் 24:27 இல் பெஸ்து போன்ற மனிதர்களைப் பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம், அவர்கள் அனைவரும் பண்டைய யூத மற்றும் ரோம உலகில் நன்கு அறியப்பட்டவர்களாக இருந்தனர். இந்த மனிதர்களின் பெயர்கள் மற்றும் பிற வரலாற்று விவரங்களைக் குறிப்பிடுவதன் மூலம், லூக்கா தனது வாசகர்கள் தனது ஆராய்ச்சியை சுயாதீனமாக ஆராய்வதை சாத்தியமாக்கினார். இந்த நபர்களும் அவரும் அறிக்கை செய்த நிகழ்வுகளைப் பற்றி அறிந்த மற்றவர்களுடன் அவர்கள் பேசலாம், சில சமயங்களில் அதே விஷயங்களைப் பற்றிய மற்றவர்களின் நூல்களைப் படிக்கலாம். லூக்காவின் அறிக்கைகள் உண்மையாக இல்லாவிட்டால், சந்தேகம் கொண்டவர்களுக்கு அவற்றை மறுப்பது எளிதாக இருந்திருக்கும்.

குறிப்பாக 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து, பல அறிஞர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகளின் வரலாற்று உண்மைத்தன்மையை பல கூடுதல் வேத நூல்கள் மற்றும் பிற தொல்பொருள் தரவுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளனர். இந்த ஆய்வுகளில் பல, லூக்கா நம்பகமான வரலாற்றாசிரியராக இருந்த பல வழிகளைக் குறிப்பிட்டுள்ளன, ஆனால் ஒரு ஜோடி குறிப்பிட்ட உதாரணங்களைக் குறிப்பிட மட்டுமே நமக்கு நேரமிருக்கிறது.

முதலாவதாக, அப்போஸ்தலர் 28:7 இல், லூக்கா குறிப்பிட்ட வரலாற்று சொற்களைப் பற்றிய அறிவைப் பிரதிபலித்தார். அங்கு அவர் மெலித்தா தீவின் தலைவரை "தீவின் முதன்மையானவர்" என்று குறிப்பிட்டார். இந்த அசாதாரண சொற்கள் பல நூற்றாண்டுகளாக பல மொழிபெயர்ப்பாளர்களை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளன, ஆனால் சமீபத்திய தொல்பொருள் ஆராய்ச்சி இது உண்மையில் அந்த நேரத்தில் தலைவரைக் குறிப்பதான ஒரு அதிகாரப்பூர்வ தலைப்பு என்று காட்டுகிறது.

இரண்டாவதாக, அப்போஸ்தலர் 27:21-26 இல், கப்பலில் பவுலின் செயல்களை வரலாற்று ஆராய்ச்சி மூலம் உறுதிப்படுத்திய வழிகளில் லூக்கா விவரித்தார். ஒரு பெரிய புயலின் போது பவுல் தன்னை ரோம் நகருக்கு ஏற்றிச்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சென்ற கப்பலின் முழு ஊழியர்களிடமும் ஆலோசனையும் ஊக்கமும் அளித்ததாக லூக்கா எழுதினார். கடந்த காலத்தில் பல விமர்சன அறிஞர்கள், கைதியாக இருந்த பவுல் இவ்வாறு வெளிப்படையாகப் பேசுவது சாத்தியமில்லை என்று வாதிட்டனர். எனவே, அப்போஸ்தலனின் கற்பனையான வீர உருவப்படத்தை லூக்கா உருவாக்கினார் என்று அவர்கள் முடிவு செய்தனர். ஆனால், கப்பல்கள் கடுமையான ஆபத்தில் இருக்கும்போது, கப்பலில் இருந்த எவரையும் பேசவும், ஆலோசனை செய்யவும் முதல் நூற்றாண்டு கடல்சார் சட்டம் அனுமதித்ததாக சமீபத்திய ஆராய்ச்சி காட்டுகிறது.

வரலாற்றின் உண்மைகளை உண்மையாக லூக்கா எடுத்துரைத்ததற்கு இந்த எடுத்துக்காட்டுகள் சான்றாக இருக்கின்றன. உண்மையான வரலாற்று நிகழ்வுகளின் கணக்கை எழுதும் அவரது எண்ணம், தேவனுடைய நித்திய உண்மை எந்த வகையிலும் வாழ்க்கையின் உறுதியான உண்மைகளிலிருந்து பிரிக்கப்படவில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. வேதத்தின் படி பார்க்கும்போது, உண்மையான வரலாற்றின் வழியாக இரட்சிப்பு வருகிறது. இதனாலேயே லூக்கா ஒரு உண்மையான வரலாற்றுக் கணக்கை எழுதுவதில் அக்கறை காட்டினார்.

## சுவிசேஷ செய்தி

லூக்காவின் வரலாற்று நோக்கத்தை மனதில் கொண்டு, லூக்காவின் நோக்கத்தினுடைய இரண்டாவது பரிமாணமான அப்போஸ்தலர் புத்தகத்தில் சுவிசேஷ செய்தியின் யதார்த்தத்தையும் வல்லமையையும் தெரிவிக்கும் இறையியல் நோக்கத்தை நாம் குறிப்பிட வேண்டும். லூக்கா 1:3-4-ன் வார்த்தைகளை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள்:

> ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று (லூக்கா 1:3-4).

நாம் இங்கே பார்ப்பது போல, தெயோப்பிலுவும் மற்றவர்களும் கற்பித்ததை உறுதிப்படுத்துவதற்காக அப்போஸ்தலருடைய நடபடிகளின் வரலாற்றை லூக்கா எழுதினார். இதன் பொருள், அப்போஸ்தலர் புத்தகம் ஒரு வகையான மதம் சார்ந்த அல்லது போதனை சார்ந்த வரலாறாக சரியாக வகைப்படுத்தப்படலாம். தெயோப்பிலு மற்றும் அவரது மற்ற வாசகர்கள் சில பார்வைகள், சில இறையியல் நம்பிக்கைகள், சில முன்னோக்குகள் போன்ற வரலாற்று நிகழ்வுகளின் இறையியல் முக்கியத்துவம் பற்றிய சில முன்னோக்குகளை அறிந்துகொள்ளும்படி அப்போஸ்தலர் புத்தகத்தில் தெரிவிக்க வேண்டும் என்று லூக்கா விரும்பினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முந்தைய பாடத்தில் நாம் பார்த்தது போல, லூக்கா உலகத்தையும் வரலாற்றையும் கிறிஸ்துவின் கர்த்தத்துவம் மற்றும் ராஜ்யத்தின் கண்ணாடி மூலம் பார்த்தார். பழைய ஏற்பாட்டு நம்பிக்கைகள் மற்றும் வாக்குத்தத்தங்கள் இயேசு மற்றும் சபையின் மூலம் நிறைவேற்றப்படுவதை அவர் கண்டார். மேலும், தெயோப்பிலு தனது ஆரம்பகால சபை நிகழ்வுகளின் பதிவை இந்த கண்ணாடி மூலம் பார்க்க வேண்டும் என்று லூக்கா விரும்பினார், மேலும் கிறிஸ்து எவ்வாறு தேவனுடைய ஆவியின் மூலம் கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தை நிறுவினார் மற்றும் தொடர்ந்து கட்டியெழுப்பினார் என்பதையும் தெரியப்படுத்த லூக்கா விரும்பினார். ஆகவே, இன்று அப்போஸ்தலர் புத்தகத்தைப் படிக்கும்போது, லூக்கா உண்மை சம்பவங்களை மட்டும் பதிவு செய்யவில்லை என்பதை நாம் எப்போதும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மாறாக, அவர் சபைக்கு அடித்தளமாக இருந்த போதனைகளான பரிசுத்த ஆவியின் மூலம் கிறிஸ்துவின் தொடர்ச்சியான பணிக்கு நம்பகமான சாட்சி என்பதன் மீது கவனத்தை ஈர்த்தார்.

## அதிகாரத்தின் மீது நம்பிக்கை

லூக்காவின் இரண்டு நோக்கங்களையும் மனதில் கொண்டு, அவரது சொல்லாட்சிக் உத்தியின் இரண்டாவது அம்சமான “அதிகாரத்தின் மீது அவர் சார்ந்திருத்தல்’ என்பதை பரிசீலிக்க நாம் தயாராக இருக்கிறோம். லூக்கா தனது சொந்த அதிகாரத்தின் அடிப்படையில் பதிவுசெய்த வரலாற்று மற்றும் இறையியல் உண்மைகளை வலியுறுத்தவில்லை, மாறாக கிறிஸ்து மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் அதிகாரத்தின் அடிப்படையில் பதிவு செய்த உண்மைகளை வலியுறுத்தினார். இந்த வழியில், லூக்கா சுவிசேஷத்தின் உண்மையான சாட்சியாக பணியாற்றினார்.

அப்போஸ்தலர் புத்தகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம் என்னவென்றால், கிறிஸ்துவின் முக்கிய சாட்சிகளாக பணியாற்றியவர்களின் வார்த்தைகள் மற்றும் செயல்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட காரியங்களின் அளவாகும். கிறிஸ்து பரலோகத்திற்குச் சென்றபோது, அவர் தம்முடைய அப்போஸ்தலர்களைத் தம்முடைய சாட்சிகளாகப் பெயரிட்டு, அவரைச் சார்ந்து, அவருடைய ராஜ்ய வேலையைத் தொடர அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அவர் அவ்வப்போது தீர்க்கதரிசிகளுக்கும் மற்ற முக்கிய சபைத் தலைவர்களுக்கும் தனது செய்தியை அறிவிக்க அதிகாரம் அளித்தார். லூக்கா தெயோப்பிலு மற்றும் பரந்த சபையை தனது முன்னோக்குகளைக் குறித்து அறிவுறுத்த முயன்றபோது, அவர் தனது சொந்த கண்ணோட்டங்களை விளக்குவதற்கும் அங்கீகரிக்கவும் ஆரம்பகால சபைத் தலைவர்களை, குறிப்பாக அப்போஸ்தலர்கள் மற்றும் தீர்க்கதரிசிகளிடம் திரும்ப திரும்ப சென்றார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அதிகாரத்தின் மீது லூக்காவின் நம்பிக்கையை இன்னும் விரிவாக ஆராய, நாம் இரண்டு விஷயங்களில் கவனம் செலுத்துவோம். முதலாவதாக, தன் வார்த்தைகள் அதிகாரபூர்வமான வார்த்தைகள் என்று லூக்கா முறையிட்ட விதத்தை நாம் பரிசீலிப்போம். இரண்டாவதாக, அதிகாரபூர்வமான செயல்களைப் பற்றிய அவரது குறிப்புகளைப் பார்ப்போம். சபையில் அதிகாரம் செலுத்திய வார்த்தைகளுக்கு லூக்கா கொடுத்த முக்கியத்துவத்துடன் ஆரம்பிக்கலாம்.

## வார்த்தைகள்

நம் முந்தைய பாடத்தில் நாம் குறிப்பிட்டது போல, லூக்கா ஒரு அப்போஸ்தலன் அல்ல. உண்மையில், இயேசு பரலோகத்திற்கு போன பிறகு அவர் விசுவாசத்திற்குள் வந்திருக்கலாம். பவுலுடன் பயணம் செய்த போதும் பயணம் செய்யாத போதும், லூக்கா இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் ஊழியங்களை ஆராய்ந்து, கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரில் கண்ட சாட்சிகளின் சாட்சியத்தை பதிவு செய்தார்.

இப்போது, ஒரு வகையில், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் அனைவரும் அவருடைய சாட்சிகள் ஆவார்கள். ஆனால், சபை ஸ்தாபிக்கப்பட்டபோது, இயேசு தம்முடைய தவறாத சாட்சிகளாக அப்போஸ்தலர்களை நியமித்தார். அவர் இல்லாத நேரத்தில் பூமியில் நிரந்தரமான அதிகாரபூர்வமான சாட்சிகளாக பணியாற்ற அவரால் நியமிக்கப்பட்டு அதிகாரம் பெற்றவர்கள் அவர்கள் மட்டுமே. இதற்கு அப்பால், தேவன் தீர்க்கதரிசிகளையும், லூக்கா போன்ற மற்ற அங்கீகரிக்கப்பட்ட சபைத் தலைவர்களையும் அவ்வப்போது அதிகாரபூர்வமாக சாட்சியளிக்க அழைத்தார்.

லூக்கா அதிகாரபூர்வமான வார்த்தைகளை முன்வைத்த மிக முக்கியமான வழி சொற்பொழிவுகளை பதிவு செய்ததாகும். திருச்சபையின் போதனைகளைப் பற்றி வெறுமனே கருத்து தெரிவிப்பதற்குப் பதிலாக, லூக்கா தொடர்ந்து விரிவான சொற்பொழிவுகளை பதிவுசெய்தார், தேவனின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் அவருடைய வரலாற்றில் செயலில் உள்ள பாத்திரங்களாக தாங்களாகவே பேச அனுமதித்தார்.

உண்மையில், இந்த புத்தகத்தில் சுமார் முப்பது சதவிகிதம் விவாதங்கள், உரையாடல்கள், தன்னுரைகள், பிரசங்கங்கள் மற்றும் பிற வகையான வாய்வழி விளக்கக்காட்சிகளைக் கொண்டவை. அப்போஸ்தலர்களின் சொற்பொழிவுகள் அதிக அதிகாரமுடையவை என்று லூக்கா கருதியதால், இது மற்ற பண்டைய கதைகளில் நாம் காண்பதை விட அதிக சதவிகிதமாகும். மொத்தத்தில், அப்போஸ்தலர்களில் சுமார் 24 சொற்பொழிவுகள் உள்ளன: பேதுருவிடமிருந்து எட்டு, பவுலிடமிருந்து ஒன்பது, ஸ்தேவானிடமிருந்து ஒன்று, யாக்கோபிடமிருந்து ஒன்று, மற்றும் வேறு சில. இந்த சொற்பொழிவுகளில் பெரும்பாலானவை அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டவை; மீதமுள்ளவை

பெரும்பாலும் தீர்க்கதரிசிகள் மற்றும் முக்கிய சபைத் தலைவர்களால் செய்யப்பட்டவை.

இது ஏன் முக்கியமானதாக இருக்கிறது? அப்போஸ்தலர் புத்தகத்தின் உரைகள் ஆரம்பகால சபைத் தலைவர்கள் யார் என்பதையும், பல பிரச்சனைகளைப் பற்றி அவர்கள் என்ன நினைத்தார்கள் என்பதையும் நமக்குக் கூறுகின்றன. சீஷர்கள் கிறிஸ்துவுக்காக ஏன் துன்பப்படத் தயாராக இருந்தார்கள் என்பதை அவை நமக்குக் காட்டுகின்றன. அவர்கள் கிறிஸ்துவுக்கு அப்போஸ்தலர்கள் செய்த சேவைக்கு சாட்சியாக இருக்கிறார்கள் மற்றும் அவருடைய ராஜ்யத்தை கட்டியெழுப்புவதற்கான அவர்களின் வழிமுறைகளை பதிவு செய்கிறார்கள். ஆரம்பகால சபையின் வரலாற்றில் லூக்காவின் முன்னோக்குகளையும் அவை அங்கீகரிக்கின்றன.

இப்போது, பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் பல விமர்சன அறிஞர்கள் இருந்துள்ளனர், அவர்கள் அப்போஸ்தலர் புத்தகத்தில் அவர் சேர்த்த உரைகளின் உண்மையான அறிக்கைகளை லூக்கா வழங்கியுள்ளார் என்பதை ஏற்கவில்லை. மேலும், சொற்பொழிவுகள் உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக இல்லாத வரலாற்றுக் கணக்குகளின் பண்டைய உலகில் உதாரணங்கள் உள்ளன என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆனால் பல விமர்சன மற்றும் சுவிசேஷ அறிஞர்கள் லூக்காவின் நாளுக்கு முன்னும் பின்னும் பல வரலாற்றாசிரியர்கள் தங்கள் வரலாற்றில் உள்ள உரைகள் உண்மையான உரைகளின் உண்மையான பிரதிநிதித்துவங்கள் என்பதை உறுதிப்படுத்த கடுமையாக உழைத்ததாக சுட்டிக்காட்டுகின்றனர். உண்மையில், அப்போஸ்தலருடைய நடபடிகளில் உள்ள உரைகளை நாம் இன்னும் உன்னிப்பாகப் பார்க்கும்போது, லூக்கா இந்த நம்பகமான வரலாற்றாசிரியர்களில் ஒருவர் என்பதற்கு உறுதியான ஆதாரங்களைக் காண்கிறோம், எனவே அவர் பதிவிட்ட உரைகள் உண்மையில் அதிகாரபூர்வமான அப்போஸ்தல போதனைகளைப் பிரதிபலிக்கின்றன.

லூக்கா பரிசுத்த ஆவியானவரால் தூண்டப்பட்டு தவறில்லாத மற்றும் அதிகாரபூர்வமான வரலாற்றை எழுதுவதற்கு அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள உரைகளின் பதிவுகளில் முதன்மையாக நம்பிக்கை கொண்டுள்ளோம். ஆயினும்கூட, அப்போஸ்தலரில் உள்ள உரைகள் உண்மையான சொற்பொழிவுகளின் துல்லியமான பிரதிநிதித்துவங்கள் என்பதை நாம் காணக்கூடிய குறைந்தது நான்கு வழிகள் உள்ளன.

முதலாவதாக, சொற்பொழிவுகள் அதற்கேற்ற பாணியைக் கொண்டுள்ளன. அப்போஸ்தலர் புத்தகத்தின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடுகையில், அவை எளிமையான பாணியுடன் இயல்பானதாகத் தெரிகின்றன. அவைகளில் சில கடினமான, மெருகூட்டப்படாத கிரேக்கத்தைப் பயன்படுத்துகின்றன. லூக்கா பேச்சாளர்களின் பேச்சுக்களை

செம்மைப்படுத்துவதையும் மாற்றியமைப்பதையும் காட்டிலும் உண்மையில் என்ன சொன்னார்கள் என்பதை எழுதுவதில் அதிக அக்கறை கொண்டிருந்தார் என்பதை இது காட்டுகிறது.

இரண்டாவதாக, சொற்பொழிவுகள் அந்தந்த சூழல்களுக்கு நன்றாகப் பொருந்துகின்றன. ஒவ்வொரு பேச்சும் பேச்சாளர் மற்றும் பார்வையாளர்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, அப்போஸ்தலர் 4 இல், ஒரு ஊனமான மனிதனைக் குணப்படுத்திய பிறகு பேதுரு யூதத் தலைவர்களிடம் பேசினார். அவருடைய பேச்சு கிறிஸ்துவில் இருக்கிற இரட்சிப்பைப் பிரகடனப்படுத்தினாலும், பேதுரு தனது வார்த்தைகளுக்கு ஆதாரமாக குணப்படுத்துவதை நேரடியாக முறையிட்டார். மேலும், அவிசுவாசியான யூதத் தலைவர்கள் பேதுருவை மறுதலிக்க முடியவில்லை, ஏனென்றால் அவர்களே அவர் குணப்படுத்துவதைக் கண்டார்கள்.

இதேபோல், பவுலின் பேச்சுகள் அந்தந்த சூழல்களைப் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, அப்போஸ்தலர் 13 இல், பிசிதியாவில் இருக்கிற அந்தியோகியாவில் உள்ள யூதர்களிடமும் தேவ பயமுள்ளவர்களிடமும், அப்போஸ்தலர் 17 இல் உள்ள எப்பிக்கூரரிடமும் ஸ்தோயிக்கரிடமும்  பேசுவதை விட அவர் மிகவும் வித்தியாசமாக பேசினார்.

மூன்றாவதாக, ஒவ்வொரு பேச்சும் அதன் பேச்சாளரின் தனித்துவத்தை பிரதிபலிக்கிறது. பொதுவான கருப்பொருள்கள் எதிர்பார்க்கப்பட வேண்டும் என்றாலும், ஒவ்வொரு பேச்சாளரும் சிறப்பியல்பு அம்சங்களைக் காட்டுகிறார்கள். உதாரணமாக, அப்போஸ்தலர் 20 இல் எபேசு சபை மூப்பர்களிடம் பவுல் பேசியதற்கு இணையாக பவுல் பேசிய பல இடங்கள் உள்ளன . இந்தக் கடிதங்களை எழுதியவர்களிடம் இருந்து நாம் எதிர்பார்க்கும் பேச்சு இதுவே.

நான்காவதாக, சில இடங்களில், லூக்கா குறிப்பிட்ட சில உரைகளை சுருக்கி வெளிப்படையாகக் கூறினார். உதாரணமாக, அப்போஸ்தலர் 2:40 இல், பேதுருவும் “வேறு பல வார்த்தைகளை” பேசியதாக அவர் குறிப்பிட்டார். லூக்காவின் குறிக்கோள் பொதுவாக உண்மையான சொற்பொழிவுகள் அவற்றின் அசல் சூழல்களில் முழுமையாகப் பிரதிபலிப்பதாக இருந்தது என்று நம்புவதற்கு இது நம்மைத் தூண்ட வேண்டும்.

இவற்றிலும் வேறு பல வழிகளிலும், லூக்கா சரித்திர ரீதியாக உண்மையான உரைகளை வழங்கினார் என்று நாம் உறுதியளிக்கலாம். அவர் தனது நோக்கங்களுக்கு ஏற்றவாறு அப்போஸ்தலர் புத்தகத்தில் உள்ள சொற்பொழிவுகளை உருவாக்கவோ அல்லது புனையவோ இல்லை. தனது சொந்த கருத்துக்கள் மற்றும் கதை விளக்கங்களின் அதிகாரம் அப்போஸ்தலர்களின் உண்மையான அதிகாரபூர்வமான சாட்சியின் மீது சார்ந்திருக்கும்படி பார்த்துக்கொண்டார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அதிகாரபூர்வமான வார்த்தைகளை பதிவு செய்வதோடு, அப்போஸ்தலர் புத்தகத்தின் மூலம் அவர் தெரிவித்த இறையியல் செய்தியை ஆதரிப்பதற்காக ஆரம்பகால சபையில் நிகழ்த்தப்பட்ட அதிகாரபூர்வமான செயல்களின் கணக்குகளையும் லூக்கா சார்ந்திருந்தார்.

## கிரியைகள்

பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கும் சில சமயங்களில் தீர்க்கதரிசிகள் மற்றும் ஆரம்பகால சபையில் உள்ள மற்ற முக்கிய தலைவர்களுக்கும் அவர்களின் சுவிசேஷ செய்தியை உறுதிப்படுத்தும் பல அற்புதமான வழிகளில் அதிகாரம் அளித்தார். குணப்படுத்துதல் மற்றும் மரித்தோரை எழுப்புதல் போன்ற ஆவிக்குரிய வரங்கள் மூலம், பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் அதிகாரப்பூர்வ பிரதிநிதிகள் என்று சாட்சியளித்தார்.

அப்போஸ்தலர் 13:7-12 ஐக் கவனியுங்கள், அங்கு பவுலின் ஊழியம் செர்கியுப் பவுல் அதிபருக்கு முன்பாக சரிபார்க்கப்பட்டது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:3-8 இல் உள்ள லூக்காவின் பதிவைக் கவனியுங்கள்:

> அந்த அதிபதி பர்னபாவையும் சவுலையும் அழைப்பித்து, அவர்களிடத்தில் தேவவசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான். மாயவித்தைக்காரன் என்று அர்த்தங்கொள்ளும் பேரையுடைய அந்த எலிமா என்பவன் அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி, அவர்களோடு எதிர்த்துநின்றான். பிறகு .... அப்பொழுது பவுல் என்று சொல்லப்பட்ட சவுல் பரிசுத்தஆவியினால் நிறைந்தவனாய் அவனை உற்றுப்பார்த்து: ".... இதோ, இப்பொழுதே, கர்த்தருடைய கை உன்மேல் வந்திருக்கிறது, சிலகாலம் சூரியனைக் காணாமல் நீ குருடனாயிருப்பாய்." உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன் தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான். அப்பொழுது அதிபதி சம்பவித்ததைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு, விசுவாசித்தான் (அப் 13:7-12).

எலிமா சுவிசேஷத்தை தடுக்க முயன்றபோது, பரிசுத்த ஆவியானவர் பவுலை குருட்டுத்தன்மையால் தாக்குவதற்கு அவருக்கு அதிகாரம் அளித்தார். பவுலின் போதனைகளும் செயல்களும் அவருடைய சுவிசேஷம் உண்மை என்று அதிபரைத் தூண்டியது.

லூக்கா அதிகாரப்பூர்வமான வார்த்தைகளையும் செயல்களையும் பதிவுசெய்தார், அதனால் அவருடைய கணக்குகளின் உண்மைத்தன்மையை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவரது வாசகர்கள் நம்புவார்கள். அப்போஸ்தலர்கள் கர்த்தராகிய இயேசுவால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பதையும், கிறிஸ்துவைச் சார்ந்து தேவனுடைய ராஜ்யத்தை அவர்கள் தொடர்ந்து கட்டியெழுப்பும்போது, எல்லா இடங்களிலும் தலைமுறைகளிலும் உள்ள திருச்சபை அவர்களின் சாட்சியைப் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளது என்பதையும் அவருடைய வாசகர்கள் பார்க்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

லூக்காவில் கூறப்பட்ட நோக்கம் மற்றும் அதிகாரத்தின் மீதான நம்பிக்கையை இப்போது நாம் பார்த்தோம், லூக்காவின் சொல்லாட்சி மூலோபாயத்தின் மூன்றாவது பரிமாணமான 'அப்போஸ்தலர் புத்தகம் முழுவதும் லூக்கா பயன்படுத்திய கட்டமைப்பு முறைக்கு' திரும்புவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

## கட்டமைப்பு முறை

அப்போஸ்தலர் புத்தகம் பல கட்டமைப்பு வடிவங்களைக் காட்டுகிறது, ஆனால் நேரத்திற்காக நாம் அதனுடைய கட்டமைப்பின் இரண்டு அம்சங்களில் கவனம் செலுத்துவோம். முதலில், மீண்டும் மீண்டும் சுருக்க அறிக்கைகளின் முக்கிய வடிவத்தை ஆராய்வோம். இரண்டாவதாக, அப்போஸ்தலருடைய நடபடிகளில் தோன்றும் சபை வளர்ச்சியின் மாதிரியைப் பார்ப்போம். சுருக்கமான அறிக்கைகளை லூக்கா பயன்படுத்திய விதத்தை முதலில் பார்க்கலாம்.

### சுருக்க அறிக்கைகள்

வேத எழுத்தாளர்கள் தங்கள் இருப்பை பல்வேறு நிலைகளில் கதைகளின் வழியாகத் தெரியப்படுத்துகிறார்கள். சில நேரங்களில், எல்லா நடைமுறை நோக்கங்களுக்காகவும், அவர்கள் ஒரு கதையின் செயலுக்குப் பின்னால் தங்களை மறைத்துக்கொள்கிறார்கள். மற்ற நேரங்களில், அவர்கள் தங்கள் கணக்குகளில் என்ன நடக்கிறது என்பது குறித்து வெளிப்படையான கருத்துக்களை வெளியிட முன்வருகிறார்கள். இந்த பிந்தைய நுட்பத்தை நாம் ஆசிரியரின் கருத்துக்கள் எனப் பேசுகிறோம். அப்போஸ்தலர் முழுவதும் லூக்கா பல அதிகாரப்பூர்வ கருத்துக்களை தெரிவித்தார். அவர் பின்னணி தகவல்களை வழங்கினார், கதாபாத்திரங்களின் இருதயங்களின் நோக்கங்களை வெளிப்படுத்தினார், அமைப்புகளை விவரித்தார். அவருடைய செய்தி தெளிவாகவும் உண்மையாகவும் வழங்கப்படுவதை உறுதிசெய்ய அவர் இதைச் செய்தார். அவர் தனது புத்தகத்தில் நிகழ்வுகள் பற்றி அடிக்கடி கருத்துரைக்கும் வழிகளில் ஒன்று அறிக்கைகளை சுருக்கப்படுத்துவதாகும்.

அப்போஸ்தலர் புத்தகம் எருசலேமிலிருந்து சுவிசேஷம் வெளியே பரவியதை விவரிப்பதை பல வாசகர்கள் கவனித்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட இடைவெளியில் சம்பவங்களை சுருக்கமாக கூறுவது லூக்காவின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வழக்கம். லூக்கா தனது வரலாற்றில் ஆறு காலகட்டங்களில் சுருக்கமான அறிக்கைகளை எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை ஆராய்வோம், அந்த ஆறு கட்டங்களாவன: எருசலேம், யூதேயா மற்றும் சமாரியாவில் சுவிசேஷத்தின் வெற்றி; சமாரியாவிலிருந்து சிரியாவின் அந்தியோகியா வரை; சீப்புரு, பிரிகியா மற்றும் கலாத்தியாவில்; ஆசியாவில், மக்கெதோனியா மற்றும் அகாயா; மற்றும் எருசலேமிலிருந்து ரோம் வரை.

உதாரணமாக, அப்போஸ்தலர் 5:42 ஐ எடுத்துக் கொள்ளுங்கள், அங்கு லூக்கா சபையின் வெற்றி மற்றும் செயல்பாட்டை பின்வரும் வார்த்தைகளுடன் சுருக்கமாகக் கூறினார்:

> தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள் (அப் 5:42).

சுவிசேஷத்தின் வெற்றி மற்றும் திருச்சபையின் வளர்ச்சியின் வெற்றிகரமான நிலைகளை முன்னிலைப்படுத்த, அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் முழுவதும் லூக்கா வழக்கமாக வழங்கிய சுருக்கமான அறிக்கையின் வகை இதுவாகும். அப்போஸ்தலர் 28:30-31ல் உள்ள அவரது கருத்தைக் கவனியுங்கள்:

> [பவுல்] தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான் (அப் 28:30-31).

சுருக்கமான அறிக்கைகள் மூலம் லூக்கா தனது வரலாற்றின் சில அம்சங்கள் மீது கவனத்தை ஈர்த்ததை இப்போது நாம் பார்த்தோம், இந்த சுருக்க அறிக்கைகளுக்கு இடையில் வெளிப்படும் சபை வளர்ச்சியின் மாதிரியைப் பார்க்க வேண்டும்.

## சபை வளர்ச்சி

சபையின் வளர்ச்சியை லூக்கா விவரித்தபோது, இரண்டு ஜோடி ஆற்றல்மிக்க சக்திகளை அவர் தொடர்ந்து குறிப்பிட்டார். ஒருபுறம், அவர் சபைக்குள் ஏற்பட்ட உள் வளர்ச்சி பற்றியும் பதற்றம் பற்றியும் எழுதினார். மறுபுறம், அவர் வெளிப்புற வளர்ச்சி மற்றும் சபைக்கு வெளியில் இருந்து வந்த எதிர்ப்பு பற்றி எழுதினார். இந்த பாடத்தில் இந்த மாதிரியை நாம் பின்னர் விளக்குவோம், எனவே இப்போது நாம் இதன் அர்த்தம் என்ன என்று பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

”உள் வளர்ச்சி” என்ற பதத்தின் மூலம், கிறிஸ்தவ சமூகத்திற்குள் ஏற்பட்ட சுவிசேஷத்தின் நேர்மறையான விளைவுகளை நாம் குறிப்பிடுகிறோம். தனிநபர்கள் மற்றும் ஒட்டுமொத்த சபையின் ஆவிக்குரிய முதிர்ச்சியை மேம்படுத்தும் வகையில், இது ஒரு தரமான வளர்ச்சி என்று நாம் கூறலாம். ”பதற்றம்” என்ற வார்த்தையின் மூலம், சபைக்குள் ஏற்பட்ட பிரச்சனைகள், கேள்விகள், சர்ச்சைகள் மற்றும் போராட்டங்களை நாம் அர்த்தப்படுத்துகிறோம். அப்போஸ்தலர் புத்தகத்தில், உள் வளர்ச்சிக்கும் பதற்றத்திற்கும் இடையே ஒரு பரஸ்பர உறவு இருப்பதை லூக்கா தொடர்ந்து நிரூபித்தார். உள் வளர்ச்சி பதற்றத்திற்கு வழிவகுத்தது, மற்றும் பதற்றம் உள் வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

லூக்காவின் சபை வளர்ச்சியின் கட்டமைப்பில் உள்ள இரண்டாவது ஜோடி கூறுகள் வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பு ஆகும். ”வெளிப்புற வளர்ச்சி” என்பது புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதன் மூலம் சபை எண்ணிக்கையில் அதிகரித்தது என்பதை குறிக்கிறோம். இந்த வளர்ச்சி எண்ணிக்கையின் அடிப்படையிலானது. ”எதிர்ப்பு” என்ற வார்த்தையின் மூலம், அவிசுவாசிகள் சுவிசேஷத்திற்கு எதிர்மறையாக நடந்துகொள்வதால், சபைக்கும் அவிசுவாசி உலகிற்கும் இடையே அடிக்கடி மோதல்கள் எழுந்ததைக் குறிப்பிடுகிறோம். இந்த புத்தகத்தில் இந்த இரண்டு கருத்துக்களுக்கும் இடையே ஒரு பரஸ்பர உறவு உள்ளது. வெளிப்புற வளர்ச்சி சில நேரங்களில் எதிர்ப்புக்கு வழிவகுத்தது, மற்றும் எதிர்ப்பு சில நேரங்களில் வெளிப்புற வளர்ச்சிக்கும் வழிவகுத்தது.

மேலும், இந்த இரண்டு ஜோடி கூறுகளுக்கும் இடையே ஒரு பரஸ்பர உறவு இருப்பதை லூக்கா அடிக்கடி நிரூபித்தார், ஒருபுறம் உள் வளர்ச்சி மற்றும் பதற்றம், மறுபுறம் வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பு. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உள் வளர்ச்சியும் பதற்றமும் வெளிப்புற வளர்ச்சியையும் எதிர்ப்பையும் தருவதாகவும், வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பு உள் வளர்ச்சி மற்றும் பதற்றத்தை ஏற்படுத்துவதாகவும் லூக்கா தொடர்ந்து சுட்டிக்காட்டினார். இந்த பாடத்தில் நாம் பின்னர் பார்க்கவிருப்பதைப் போல், சபை வளர்ச்சிக்கான இந்த முறை இந்த புத்தகத்தில் அடிக்கடி தோன்றும், இது புத்தகத்திற்கான ஒரு வகையான கருத்தியல் கட்டமைப்பை அல்லது உள் கூட்டை உருவாக்குகிறது.

லூக்கா தனது புத்தகம் முழுவதும் செய்த சுருக்கங்கள் அப்போஸ்தலர் புத்தகத்தின் ஒவ்வொரு முக்கிய பகுதியும் ஆரம்பகால திருச்சபையின் சாட்சி மூலம் பரவிய சுவிசேஷத்தின் வளர்ச்சியை சித்தரிக்கிறது என்று விளக்குகின்றன. தெயோப்பிலு மற்றும் லூக்காவின் புத்தகத்தைப் படித்த மற்றவர்களின் மீது இந்தக் கருத்துக்கள் ஏற்படுத்தியிருக்கும் விளைவை கற்பனை செய்து பாருங்கள். எவ்வளவு பெரிய பதற்றமாக இருந்தாலும், எவ்வளவு பயங்கரமான எதிர்ப்பாக இருந்தாலும், தேவன் தம்முடைய சபையின் உள் மற்றும் வெளிப்புற வளர்ச்சிக்காக சுவிசேஷத்தின் மூலம் எப்பொழுதும் பாடுபடுகிறார் என்று எல்லா இடங்களிலும் உள்ள



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விசுவாசிகளை அவைகள் ஊக்குவித்திருக்கும். இந்தக் கண்ணோட்டத்தில் எல்லா வரலாற்றையும் படிக்க ஆரம்பகால கிறிஸ்தவர்களை அவைகள் தூண்டியிருக்கும். அவர்கள் தங்கள் தேவனுக்கும் இரட்சகருக்கும் உண்மையுள்ள சாட்சிகளாக இருந்தால், உள் மற்றும் வெளிப்புற பிரச்சனைகள் இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் நாளிலும் சுவிசேஷத்தின் வளர்ச்சியைக் காண்பார்கள் என்று அவைகள் உறுதியளித்திருக்கும்.

# உள்ளடக்கம்

லூக்காவின் சொல்லாட்சி உத்தியின் சில மைய பரிமாணங்களை மனதில் கொண்டு, நாம் இப்போது நமது இரண்டாவது தலைப்பான அப்போஸ்தலர் புத்தகத்தின் உள்ளடக்கத்திற்கு திரும்புவோம். இந்தப் புத்தகத்தின் உள்ளடக்கத்தை சுருக்கமாகச் சொல்ல பல வழிகள் இருந்தாலும், சபையின் வளர்ச்சியை பூமியில் தேவனுடைய ராஜ்யமாக லூக்கா விவரித்த விதத்தில் கவனம் செலுத்துவோம்.

லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள், இயேசு எவ்வாறு சுவிசேஷத்தை அறிவிப்பதன் மூலம் தேவனுடைய பூமிக்குரிய ராஜ்யத்தை கொண்டு வந்து கட்டத் தொடங்கினார் என்பதை விளக்குகின்றன. லூக்கா தனது சுவிசேஷத்தில், இயேசு தனது பூமிக்குரிய ஊழியத்தின் போது ராஜ்யத்திற்கு அமைத்த அடித்தளத்தை விவரித்தார். அப்போஸ்தலர்களும் சபையும் அவருடைய ராஜ்யத்தைக் கட்டியெழுப்பும் வேலையைத் தொடர இயேசு எவ்வாறு பரிசுத்த ஆவியை ஊற்றினார் என்பதை அப்போஸ்தலர் புத்தகத்தில் லூக்கா விவரித்தார். இந்த வழியில், தேவனுடைய ராஜ்யம் என்பது லூக்காவின் படைப்புகளின் இரண்டு தொகுதிகளின் மேலோட்டமான கதையாகும். எனவே, அப்போஸ்தலருடைய நடபடிகளின் உள்ளடக்கத்தை நாம் ஆராயும்போது, அப்போஸ்தலர்களின் தலைமையில் ராஜ்யம் தொடர்ந்து விரிவடையும் விதத்தில் சிறப்பு கவனம் செலுத்துவோம்.

அப்போஸ்தலர் 1:8 இல் இயேசு அப்போஸ்தலர்களை நியமித்தபோது, சாட்சிகளாக பணியாற்றும்படி அவர்களுக்கு அறிவுறுத்தினார், முதலில் எருசலேமில் நற்செய்தியை அறிவித்து, பின்னர் உலகம் முழுவதும் பரப்பினார்கள். அப்போஸ்தலர்களுக்கு அப்போஸ்தலர் 1:8 இல் இயேசு சொன்ன வார்த்தைகளை மீண்டும் ஒருமுறை கவனியுங்கள்:

> பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்” (அப் 1:8).



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இங்கே இயேசு சபையின் சுவிசேஷ சாட்சிக்காக ஒரு புவியியல் உத்தியை வகுத்தார். பரிசுத்த ஆவியால் அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர்கள் எருசலேமில் சாட்சி கொடுக்க ஆரம்பித்து, பின்னர் யூதேயா மற்றும் சமாரியாவுக்கு நற்செய்தியை எடுத்துச் செல்ல வேண்டும், இறுதியாக பூமியின் கடைசி வரை, அவர்கள் சென்ற இடமெல்லாம் ராஜ்யத்தை விரிவுபடுத்த வேண்டும்.

புவியியல் சாட்சி விரிவாக்கத்திற்கான இயேசுவின் அழைப்பைச் சுற்றி லூக்கா அப்போஸ்தலர் புத்தகத்தை அமைத்திருப்பதை பல அறிஞர்கள் கவனித்திருக்கிறார்கள். மேலும் அவரது பணியை ஆய்வு செய்யும் போது இதே முறையை பின்பற்றுவோம். எருசலேமில் சுவிசேஷத்தின் வளர்ச்சியை அப்போஸ்தலர் 1:1-8:4 இல் லூக்கா விவரித்த விதத்தை முதலில் பார்ப்போம். இரண்டாவதாக, நாம் 8:5-9:31 இல் யூதேயா மற்றும் சமாரியாவில் ராஜ்யம் வளர்ச்சியடைந்ததைப் பற்றிப் பார்ப்போம். மூன்றாவதாக, சபை 9:32-28:31 இல் பூமியின் முனைகளுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு சென்ற விதத்தில் கவனம் செலுத்துவோம். இந்த மூன்றாவது பகுதி மிகவும் நீளமாக இருப்பதால், நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள லூக்காவின் சுருக்கமான அறிக்கைகளால் பரிந்துரைக்கப்பட்ட வளர்ச்சியின் நான்கு நிலைகளை மையமாகக் கொண்டு இதில் சிறப்பு கவனம் செலுத்துவோம்: முதலில், 9:32-12:25 இல் பெனிக்கே, சீப்புரு மற்றும் அந்தியோகியா; இரண்டாவது, 13:1–15:35 இல் சீப்புரு, பிரிகியா மற்றும் கலாத்தியா; மூன்றாவது, 15:36–21:16 இல்ஆசியா, மக்கெதோனியா மற்றும் அகாயா; மற்றும் நான்காவது, 21:17-28:31 இல் ரோம் வரை.

நாம் முன்பு விவரித்த உள் வளர்ச்சி மற்றும் பதற்றம் மற்றும் வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பு ஆகியவற்றின் வடிவங்களில் கவனம் செலுத்துவதன் மூலம், இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றையும் இன்னும் விரிவாகப் பார்ப்போம். அப்போஸ்தலர்களின் சுவிசேஷ சாட்சியின் மூலம் எருசலேமில் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்ட விதத்தில் அப்போஸ்தலர் 1:1-8:4 இல் ஆரம்பிக்கலாம்.

## எருசலேம்

எருசலேம் பண்டைய இஸ்ரவேலின் தலைநகரம் ஆகும். மற்றும் பழைய ஏற்பாட்டில் தேவனின் சிறப்பு தேசம் ஆகும். எருசலேம் லூக்காவின் கணக்கின் தொடக்கப் புள்ளியாக இருந்தது, ஏனென்றால் பழைய ஏற்பாடு முழுவதும் தேவனுடைய ராஜ்யத்தில் அது முக்கிய பங்கு வகித்தது, மேலும் இயேசுவின் ஊழியத்திலும் முக்கிய பங்கு வகித்தது. மேலும், லூக்கா அப்போஸ்தலர் புத்தகத்தில் பல இடங்களில் எருசலேமில் நடந்த நிகழ்வுகளைப் பற்றி எழுதினார், புதிய நாடுகளுக்கு நற்செய்தியைப் பரப்புவதில் அப்போஸ்தலர்களின் பணி இந்த சிறப்பு நகரத்தில் வேரூன்றியிருந்தது என்பதைக் காட்டுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

லூக்கா ராஜ்யத்தின் வளர்ச்சியை எருசலேமில் உள்ள சுவிசேஷத்தின் மூலம் நான்கு முக்கிய கதைகளில் அறிக்கை செய்தார்: முதலாவதாக, அப்போஸ்தலர் 1-2 இல் ஆவியின் எதிர்பார்ப்பு மற்றும் ஆவி ஊற்றப்படுதல்; இரண்டாவது, பேதுருவின் ஆலயப் பிரசங்கம் மற்றும் அப்போஸ்தலர் 3-4 இல் ஏற்பட்ட உபத்திரவம்; மூன்றாவதாக, அனனியா மற்றும் சப்பீராளின் கதை மற்றும் அப்போஸ்தலர் 5 இல் ஏற்பட்ட துன்புறுத்தல்; மற்றும் நான்காவது, உதவியாளர்களின் தேர்வு மற்றும் அப்போஸ்தலர் 6:1–8:4 இல் உள்ள உபத்திரவம்.

விளக்கத்தின் மூலம், எருசலேமில் நடந்த பல நன்கு அறியப்பட்ட நிகழ்வுகளில் உள் வளர்ச்சி தோன்றுகிறது, அவை:

- அப்போஸ்தலர் 1 இல் அப்போஸ்தலர்கள் சுவிசேஷ வேலைக்காக அனுப்பப்படுதல்
- அப்போஸ்தலர் 2 இல் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி ஊற்றப்படுதல்
- எருசலேமில் நடந்த அற்புதங்களின் அனுபவம், குறிப்பாக அப்போஸ்தலர் 3, 4 மற்றும் 5 இல் பேதுருவால் நிகழ்ந்த அற்புதங்கள்

அதே நேரத்தில், கிறிஸ்தவ சமூகத்திற்குள் பல வழிகளில் இருந்த பதட்டங்களையும் நாம் காண்கிறோம்:

- அப்போஸ்தலர் 1 இல் பன்னிரண்டாவது அப்போஸ்தலன் யார் என்ற கேள்வி
- அப்போஸ்தலர் 5 இல் அவர்கள் நன்கொடையாக வழங்கிய பணத்தைப் பற்றி அனனியா மற்றும் சப்பீராளின் பொய்; மற்றும்
- அப்போஸ்தலர் 6 இல் கிரேக்க விதவைகளுக்கு எதிரான பாகுபாடு

இதற்கு அப்பால், எருசலேமில் சுவிசேஷ சாட்சியைக் குறித்த லூக்காவின் பதிவும் வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பின் மாதிரியைப் பின்பற்றுகிறது. உதாரணத்திற்கு:

- பெந்தெகொஸ்தே நாளில், அப்போஸ்தலர் 2 இல் சுமார் 3,000 பேர் சபையில் சேர்க்கப்பட்டனர்.
- யோவான் மற்றும் பேதுரு அப்போஸ்தலர் 4 இல் சிறையில் அடைக்கப்பட்டபோது சபையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 5,000 ஆக உயர்ந்தது.
- அப்போஸ்தலர் 6 இல் பல யூத ஆசாரியர்கள் சபையில் சேர்க்கப்பட்டனர்

அப்படியிருந்தும், நாம் ஏற்கனவே பரிந்துரைத்துள்ளபடி, இந்த வெளிப்புற வளர்ச்சி பெரும்பாலும் விசுவாசமற்ற உலகத்தின் வலுவான எதிர்ப்புடன் அமைக்கப்பட்டது, அதாவது:



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

- அப்போஸ்தலர் 5 இல் பேதுரு மற்றும் யோவான் கைது செய்யப்பட்டு அடிக்கப்படுதல்.
- அப்போஸ்தலர் 7ல் ஸ்தேவான் இரத்த சாட்சியாக மரித்தல்; மற்றும்
- அப்போஸ்தலர் 8 இல் எருசலேமிலிருந்து துன்புறுத்தப்படுவதன் மூலம் சபை சிதறுகிறது.

எருசலேமில் வளர்ந்து வரும் சபையை ஊக்கப்படுத்த உள் பதட்டத்தையும் வெளிப்புற எதிர்ப்பையும் நாம் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியின் வல்லமையின் கீழ், உண்மை அதற்கு நேர்மாறாக இருந்தது. சுவிசேஷ சாட்சி பெரும் பலத்துடன் தொடர்ந்து முன்னேறியது, இறுதியில் அதன் முன்னேற்றம் தடையின்றி நடந்தது.

## யூதேயா மற்றும் சமாரியா

அப்போஸ்தலருடைய நடபடிகளின் இரண்டாவது பெரிய பிரிவு, அப்போஸ்தலர் 8:5–9:31 இல் யூதேயா மற்றும் சமாரியாவில் உள்ள சபையின் சுவிசேஷ சாட்சியின் மீது கவனம் செலுத்துகிறது. யூதேயா மற்றும் சமாரியாவின் பகுதிகள் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளுக்குச் சமமானவை. இயேசு பரமேறுவதற்கு முன் இந்தப் பகுதிகளில் ஊழியம் செய்திருந்தார். யூதேயா மற்றும் சமாரியாவில் லூக்காவின் கவனத்தை இரண்டு முக்கிய கதைகளாகப் பிரிக்கலாம், அவையாவன: அப்போஸ்தலர் 8:5-40 இல் பிலிப்புவின் ஊழியம் மற்றும் அப்போஸ்தலர் 9:1-31 இல் பவுலின் மனமாற்றம்.

இந்த கதைகள் சபையின் உள் வளர்ச்சியில் கவனத்தை ஈர்க்கின்றன. உதாரணமாக, அப்போஸ்தலர் 8 இல் புதிய விசுவாசிகள் தொடர்ந்து பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டதால் உள் வளர்ச்சி தொடர்ந்தது, மேலும் அப்போஸ்தலர் 9 இல் சவுல் ஒரு அப்போஸ்தலன் ஆக்கப்பட்டார்.

இந்த நிகழ்வுகடன் சேர்ந்து சபைக்குள் பதற்றம் கட்டப்பட்டது. உதாரணமாக, சில விசுவாசிகள் இன்னும் பரிசுத்த ஆவியைப் பெறாததால், அப்போஸ்தலர் 8-ல் கேள்விகள் எழுப்பப்பட்டன. சீமோன் என்ற மந்திரவாதி அப்போஸ்தலர்களிடமிருந்து அப்போஸ்தலர் 8 இல் பரிசுத்த ஆவியின் வல்லமையை வாங்க முயன்றான்.

மறுபுறம், வெளிப்புற வளர்ச்சி மற்றும் எதிர்ப்பின் முறையும் தொடர்ந்தது. உதாரணமாக, அப்போஸ்தலர் 8 இல் பிலிப்புவின் சுவிசேஷ ஊழியத்தின் மூலம் பல மனமாற்றம் செய்யப்பட்டவர்கள் மற்றும் அப்போஸ்தலர் 9 இல் பவுலின் மனமாற்றம் போன்ற நிகழ்வுகளின் மூலம் யூதேயா மற்றும் சமாரியாவில் சபை தொடர்ந்து எண்ணிக்கையில் வளர்ந்தது.

